# தொழில் வணிகத் துறை

## மாவட்டத் தொழில் மையத்தின் பணிகள்

- ஊராட்சி ஒன்றிய அளவில் மற்றும் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்களுக்கு ஊக்குவிப்பு முகாம் நடத்துதல்.
- தொழில் முனைவோர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
- தொழில் முனைவோர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புகை சான்று பகுதி – I மற்றும் பகுதி – II வழங்குதல்.
- குடிசை தொழில் சான்று வழங்குதல்.
- கைவினை தொழில் சான்று வழங்குதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கை 2008ன்படி தொழில் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குதல்.
- மின்னாக்கி மானியம் (320 KVA) வரை வழங்குதல்.
- அரசினால் குறிப்பிடப்பட்டுள்ள 18 வகையான மின்சாதன வீட்டு உபயோகப் பொருட்கள் இந்திய தரச்சான்று அடிப்படையில் உள்ளனவா? என கண்டறிதல்.
- ஒரு முனை தீர்வுக்குழுவின் மூலம் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான உரிமங்களை பெற்று தருதல்.
- மாவட்ட அளவில் தொழில் முனைவோர் கருத்தரங்கு நடத்துதல்.
- மாநில அரசின் சிறந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான விருதுகளுக்கு பரிந்துரை செய்தல்.
- குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பெறப்படாமல் நிலுவையிலுள்ள தொகைகளை தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கல் குழு மூலம் பெற்று தர உதவுதல்.

- புதிய தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும் நடவடிக்கைகள்.
- நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை கண்டறிந்து புனரமைக்க ஏற்பாடு செய்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரச்சனைகளை கண்டறிந்து தீர்வு காண நடவடிக்கை எடுத்தல்.

## குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான சலுகைகள்

1. மாவட்டத்தில் எந்த பகுதியிலும் உற்பத்தியை தொடங்கும் குறு நிறுவனங்களுக்கான மானிய திட்டங்கள்

- இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 15% மூலதன மானியம்.
- 3 வருடங்களுக்கு மின் கட்டணத்தில் 20% குறைந்தழுத்த மின் மானியம்.
- 6 வருடங்களுக்கு இயந்திர தளவாடங்களின் மதிப்பிற்கு இணையான மதிப்பு கூட்டு வரி மானியம்.
- கடன் அடமான சொத்துகளுக்கு முத்திரை தாள் வரி விலக்கு.

2. மதுரையில் அமைந்துள்ள 11பின் தங்கிய வட்டாரங்கள் மற்றும் தொழில் பேட்டைகளில் துவங்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் 13 ஊராட்சி ஒன்றியங்களில் துவங்கப்படும் வேளாண் சார்ந்த நிறுவனங்களுக்குமான மானிய திட்டங்கள் :

- இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 15% மூலதன மானியம்.
- 25 வேலையாட்களுக்கு மேல் பணியில் அமர்த்தும் நிறுவனங்களுக்கு 5% கூடுதல் வேலைவாய்ப்பு மானியம்.
- தொழில் முனைவோர்கள் பெண்கள், ஆதி திராவிடர் / பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் திருநங்கைகள் ஆக இருந்தால் 5% கூடுதல் மானியம்.
- மாசு கட்டுப்பாடு சாதனங்கள் நிறுவினால் 25% மூலதன மானியம்.
- 3 வருடங்களுக்கு மின் கட்டணத்தில் 20% குறைந்தழுத்த மின் மானியம்

3. மாவட்டத்தில் எந்த பகுதியிலும் துவங்கும் 10 வகையான சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கு 15% சிறப்பு மூலதன மானியம் வழங்கப்படுகிறது.

அவைகள் : 1. மின் மற்றும் மின்னனுப் பொருட்கள் உற்பத்தி 2. தோல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி 3. தானியியங்கி பொறி மற்றும் சாதனங்கள் உற்பத்தி 4. மருந்து மற்றும் மருந்து பொருட்கள் உற்பத்தி 5. சூரிய வெப்ப மின் கருவிகள் தயாரித்தல் 6. ஏற்றுமதிக்கான தங்க மற்றும் வைர நகைகள் தயாரித்தல் 7. மாசு கட்டுப்பாடு சாதனங்கள் தயாரித்தல் 8. விளையாட்டு சாதனங்கள் உற்பத்தி 9. விலை குறைந்த கட்டிட பொருட்கள் தயாரித்தல் 10. ஆயத்த ஆடைகள் தயாரித்தல்.

## மற்ற மானிய திட்டங்கள்

- தொழிற்பேட்டை மற்றும் பிற்படுத்தப்பட்ட பகுதியில் அமையும் நிறுவனங்களுக்கு பத்திர பதிவுத் துறையில் 50% முத்திரை தீர்வை சலுகைகள்.
- 3% பின் முனை வட்டி மானியம்.
- புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய / தொழில் நவீனபடுத்துதல் உள்ள நிறுவனங்களுக்கு காப்புரிமை மற்றும் வணிக குறி பதிவு கட்டணத்தில் 50% மானியம்.
- மின்னாக்கி மானியம் மின்னாக்கி விலையில் 25% (அ) 5 லட்சம்

## ஒரு முனை தீர்வுக்குழு திட்டம்

பல்வேறு துறைகளில் தொழில் முனைவோர்கள் / தொழில் நிறுவனங்கள் கட்டிட வரைபட அனுமதி / உரிமங்கள் பெறுவதற்கு மாவட்டத் தொழில் மையம் மூலமாக விண்ணப்பிக்கலாம். மாவட்டத் தொழில் மையத்திலிருந்து உரிய துறைகளுக்கு தொழில் நிறுவனங்களின் கட்டிட வரைபட அனுமதிக்கான வரைபடங்கள் மற்றும் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும்.

இதற்கென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராக கொண்டு ஒரு முனை தீர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் பொது

மேலாளர், மாவட்டத் தொழில் மையம் உறுப்பினர் செயலராகவும், மற்ற துறைகளின் பிரதிநிதிகள் உறுப்பினராகவும் செயல்படுவார்கள்.

ஒரு முனை தீர்வுக்குழு, தொழில் நிறுவனங்கள், கட்டிட வரைபட அனுமதி / உரிமங்கள் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து கால தாமதத்தை தவிர்க்கும் வகையில் தகுதியின் அடிப்படையில் வரைபட அனுமதி மற்றும் உரிமங்கள் பெற நடவடிக்கை எடுத்தல்.

## தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கல் குழு

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வளர்ச்சிக்கான சட்டம் 2006ல் குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கல் குழு அமைக்க சட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதன்படி குறு, சிறு தொழில் நிறுவனங்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை, விற்பனை செய்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வரப்படாமல் உள்ள நிலுவையினங்களை குறு, சிறு தொழில் நிறுவனங்கள் வசூல் செய்ய வழிவகை செய்யும் பொருட்டு, மத்திய அரசின் பரிந்துரைப்படி தமிழக அரசினால் குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கல் குழு. அரசானை எண். 63, சிறு தொழில் துறை நாள் 08.12.2006ன் படி துவங்கப் பெற்று நடைபெறுகிறது. இச்சட்டம் "Interest on delayed payments to MSE, Arbitration & Conciliations Act 1996 (Central Act 26 of 1996 and in the Exercise of powers conferred by section 7A"

இச்சட்டத்தின்படி, மதுரை மாவட்டம் ஒரு மண்டலமாக (Region) அறிவிக்கப்பட்டு, இதன்கீழ் திண்டுக்கல், மதுரை, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த குறு, சிறு தொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய நிலுவையினங்களுக்கு அந்தந்த மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மூலமாக மதுரை மாவட்ட தொழில் மைய அலுவலகத்திற்கு முறையீடு செய்து பயன் அடையலாம்.

---

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**பொது மேலாளர்**

மாவட்ட தொழில் மையம், அழகர் கோவில் ரோடு, மதுரை – 625 002. தொலைபேசி எண் : 0452 – 2537621

மின் அஞ்சல் : dicmdu@gmail.com இணையதளம் : www.dicmdu.in



Mukhil Graphix ✆ 98434 62200